<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, செங்கல்பட்டு</u>

**<u>CC No. 11/2024</u>**

**அ.சா.1– பிரவீன் ராஜ், த/பெ.சுரேஷ்.** **நாள்–01.11.2025**

**எதிரி ஆஜர்.**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>**

கடன் கொடுத்த மாதம் பிப்ரவரி 02, 2022 என பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், ரொக்க தொகையான ரூ.3,00,000/– ல் ரூ.1,00,000/– ஜீன் 2022 ல் தந்ததாகவும், 15 மாதங்கள் கழித்து 05.09.2023 ல் வழக்கு காசோலையை எதிரி தந்ததாகவும் முரண்பட்டு சாட்சியமளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் நீதிமன்றத்தை திசை திருப்புவதற்காக அவ்வாறு சாட்சியமளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் எதிரி ரூபாய் 1 லட்சம் கொடுத்துவிட்டு பிறகு 2 மாதம் அவகாசம் கொடுத்தேன் என்று குறிப்பிட்டுள்ளேன் அந்த விவரத்தை எனது வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சொல்லியுள்ளேன். நான் கூறியுள்ள விவரங்களின்படி 1 வருட காலத்திற்கு பிறகு காசோலை எதிரி கொடுத்ததாக கூறுவது ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சியம் அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பினை எந்த முகவரிக்கு அனுப்பினேன் என்றால் இவ்வழக்கு புகாரில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பியுள்ளேன். ஆதார் கார்டு கொடுத்திருந்தார் அதிலிருந்த முகவரிக்கு அனுப்பினேன் சாட்சியிடம் எதிரியின் ஆதார் கார்டு காண்பிக்கப்பட்டது அதிலுள்ள முகவரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்படவில்லையென்று சொன்னால் சரியல்ல அந்த ஆதார் கார்டின் நகல் **<u>எதாசஆ.1</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் 15 மாதங்கள் கழித்து காசோலை கொடுத்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் எனக்கு காசோலை வேறு வழியில் கிடைத்தது என்றாலும் அதனை மறைத்து காசோலையை பயன்படுத்தி எதிரிக்கு கடன் கொடுத்த விவரங்கள் சரிவர கூறவில்லையென்றாலும் எதிரி என்னிடம் எந்த விதமாக கடனும் பெறவில்லையென்றாலும் நான் வேறு வழியில் கிடைத்த காசோலையை தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரி மீது ஒரு பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் அபராதத்துடன் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை – இல்லை.</u>**

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

(sd/-)V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.